R5363

## WILL THE EARTH BE BURNED?
# பூமி எரிந்து போகுமா?

நாம் இரண்டாம் வருகைக்காரர்களின் கருத்தை மாத்திரமல்ல, கிறிஸ்தவ தேசங்களின் மரபு வழி விசுவாச பிரமாணத்தின் போதனைகளையும் எதிர்க்க கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் நமது பூமி எரிக்கப்படாது. அது உருவக அடையாள பாஷையில் மட்டுமே அப்படி சொல்லப்பட்டது என்று வேதாகமத்தின்படி நாம் அறிவிக்கிறோம். இந்த யுகத்தின் முடிவில் ஒரு மகா ஆபத்து துரிதமாக வந்து தற்கால ஸ்தாபனங்களை, மத, பொருளாதார மற்றும் சமூக ஸ்தாபனங்களை அழிக்கும், விழுங்கும். அடையாள பாஷையில் எரிக்கும் என்று வேதாகமம் போதிக்கிறது. பொங்கி எழும் அக்கினி என்பது அராஜகமாக இருக்கும். வேதாகமத்தின்படி, அதன் பயங்கரமான விளைவு என்பது தற்கால ஸ்தாபனங்களின் சாம்பல் (அழிவு) ஆகும்.

கடந்த ஆறாயிரம் வருடங்களாக தனிப்பட்டவர் மற்றும் தேசங்களின் காரியங்களில் மேடுகளையும் பள்ளங்களையும் பெற்றிருந்தது. கிறிஸ்தவ தேசம் சில செல்வாக்குகளை பெற்றிருக்கிறது. கிறிஸ்தவ மதமானது அதிக செல்வாக்கு பெற்றிருக்கிறது. உண்மையான கிறிஸ்தவ தேசங்கள் உண்மையான பரிசுத்தவான்களை உருவாக்கின. அவர்கள் ஆண்டவரின் அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்கள்; அவர்கள் ஜீவிக்கும் போது உலகத்தின் குப்பையைப் போலவும் துடைத்துப்போடுகிற அழுக்கைப் போலவும் கருதப்படுகிறார்கள்; இறந்த பிறகு பரிசுத்தவான்களாகவும் வெற்றி வீரர்களாகவும் இருப்பார்கள். கிறிஸ்தவ சபையானது வல்லமையில்லாத ஒரு தெய்வ பக்தியின் வடிவத்தை பெற்றிருக்கிறது. வடிவமானது அநேக வழிகளில் உலகத்தில் செல்வாக்குக்கும் வல்லமைக்கும் உதவியது; கிறிஸ்து மற்றும் அவரது சபையின் பெயரால் பயங்கரமான குற்றங்களை செய்ய அடிக்கடி வழி நடத்துகிறது.

இப்பொழுது சுவிசேஷ யுகம் முடிவடைந்து கொண்டும் மேசியாவின் யுகம் விடிந்து கொண்டும் இருக்கிறது. புதிய யுகத்தின் திரை தூக்கப்படுவதால் அது மனிதர்களிடையே ஆச்சரியமான பலன்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இருள், அறியாமை, மூட நம்பிக்கை ஆகியவை புதிய நாளின் வெளிச்சத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. உலகமானது விழித்துக்கொண்டிருக்கிறது, ஏனெனில் இது காலைப் பொழுது, மானிடரின் சிந்தனை சக்தி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. ஆகையால் ஆச்சரியமான, நீராவி சக்தி, மின்சாரம் போன்ற நமது நாளின் கண்டுபிடிப்புகள் சிந்தனை சக்தியை ஒருவருவக்கொருவர் உலகம் முழுவதும் கொண்டு செல்கிறது. அச்சு இயந்திரம், அஞ்சல் முறை போன்றவை விழித்தலுக்கு சக்தியுள்ள காரணிகள். கர்த்தர் தமது தீர்க்கதரிசிகள் மூலம் அறிவித்தபடி இந்த காலத்தில் அறிவு பூமியை நிரப்பிக்கொண்டிருக்கிறது. (ஏசாயா 11:9; ஆபகூக் 2:14; தானியேல் 12:4)

ஆனால் இந்த அறிவு, தயாரற்ற இருதயத்தை உடைய ஜனங்களிடம் வந்து கொண்டிருக்கிறது. கல்வியறிவற்ற, அறியாமையிலுள்ள கரங்கள் அரசியல், சமூகம், மதம் மற்றும் அரசியல் அதிகாரங்களை பெற நீட்டப்பட்டிருக்கின்றன. தவறுகள் அங்கீகரிக்கப்படுகின்றன; ஆனால் அதற்கு தீர்வு காண நாடுகிறவர்கள் இன்னும் மோசமானதையே செய்கிறார்கள். உலகத்தின் ஒரே நம்பிக்கை தேவன் வழங்குகிற மேசியாவின் ராஜ்யம் என்பதை அனைவரும் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால் இந்தப் பாடம் கற்றுக்கொள்ளப்படுமுன் அதிருப்தியின் ஆவி, அறிவினால் ஊக்கப்படுத்தப்பட்டு சந்தர்ப்பங்களை எடுத்துக்கொண்டு, அறியாமையினால் தற்செயலாக, நமது தற்கால சமூக, மத, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்தாபனங்களை "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலம் மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலத்தில்," " இதுவரை சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவ காலத்தில் அழித்துப் போடும்." (தானியேல் 12:1; மத்தேயு 24:21)

சகல அறிவுள்ள ஜனங்களாலும் உணரப்படுகிற இந்த மகா பெரிய பேரழிவு தனித்துவம் வாய்ந்ததாக இருக்கும். இது வேதாகமத்தில் பல்வேறு அடையாள பதங்களால் விளக்கப்பட்டிருக்கிறது. அது சில சமயங்களில் சுழற்காற்றுக்கும், வேறு சமயங்களில் புயலுக்கும் ஒப்பிட்டு விளக்கப்படுகிறது. மறுபடியும் ஒரு பெருங்கடல் அலைக்கும் ஒப்பிட்டு சொல்லப்படுகிறது. கடல் (திரளான ஜனங்களை குறிக்கிறது) மலைகளை (ராஜ்யங்களை குறிக்கிறது) அது முழு பூமியையும் விழுங்கும் அக்கினியாக விளக்கப்படுகிறது. (செப்பனியா 1:18; 3:8) எனினும் ஒவ்வொரு விஷயத்திலும் அது ஒரு அடையாளம் மட்டுமே என்று காண்பிக்க ஒரு அடையாளத்துடன் இணைக்கப்படுகிறது. அது முழு மனுக்குலத்தின் அழிவை அர்த்தப்படுத்தவில்லை. உதாரணத்திற்கு புயலை விளக்கிய பிறகு, நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள், அதன் பலன் பெரும் அமைதி என்று கர்த்தர் தீர்க்கதரிசி மூலமாக அறிவிக்கிறார். (சங்கீதம் 46:8-10) அக்கினி விஷயத்தில், அது முழு உலகத்தையும் (சமூக ஏற்பாடுகள்) விழுங்கும் என்றும் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு. ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படி அவர்களது பாஷையை சுத்தமான பாஷையாக்குவேன் என்றும் வாசிக்கிறோம். (செப்பனியா 3:9)

அக்கினியானது பூமியை விழுங்கும் என்பது, அடையாளமான பூமியை அல்லது சமூக நிலைமைகளை விழுங்குவதை குறிக்கிறது. ஏனெனில் ஜனங்கள் அமர்ந்திருந்து கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அடைவார்கள். அப்பொழுது உலகிற்கு கொடுக்கப்படும் சுத்தமான சத்தியமானது, நூற்றாண்டு காலமாக உலகிற்கு கொடுக்கப்பட்டு வந்த மாறுபாடான விசுவாச பிரமாணத்தின் குழப்பமான செய்திகளுக்கு மாறானதாக பலமுள்ளதாக இருக்கும். அதை உலகின் சிந்திக்கும் மனங்கள் அதை உணர்ந்து கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருப்பார்கள். அது கிறிஸ்தவர்களின் மனங்களை குழப்பியிருக்கும்.

ஆகையால் நாம் கர்த்தருடைய வார்த்தையை எடுத்துக்கொண்டு, கிறிஸ்தவ தேசங்களின் விசுவாச பிரமாணங்களை நிராகரிப்போமாக. இயேசுவின் இரண்டாம் வருகையில் சொல்லர்த்தமான பூமி எரிக்கப்படும் என்று நினையாதிருப்போமாக. ஆனால் அதற்கு முற்றிலும் மாறாக, "உலகத்தோற்ற முதல் தேவன் நம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைக்கப்பட்ட மறு சீரமைப்பு காலங்கள்" என்று அப்போஸ்தலர் பேதுருவின் வார்த்தைகள் அப்பொழுது ஆரம்பிக்கும் என்று நாம் நம்புவோமாக. (அப்போஸ்தலர் 3:19-21) "பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது" என்கிற வேத

வாக்கியங்களின் அறிவிப்பை ஞாபகத்தில் கொள்ளுவோமாக. (பிரசங்கி 1:4) "பூமியை வெறுமையாயிருக்க சிருஷ்டியாமல் அதை குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தினவர் கர்த்தரே." (ஏசாயா 45:18)

பூமி முழுவதும் இன்னும் குடியேற்றப்படவில்லை என்பதை நாம் நினைவுகூருவோமாக. பெரும்பாலான பிரதேசங்கள் இன்னும் ஆராயப்படவில்லை. வானம் தமக்கு சிங்காசனம் என்றும் "பூமி தமக்கு பாதபடி" என்றும், தன் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன் என்றும் பூமியைப் பற்றி தேவன் கூறின வாக்குத்தத்தத்தை நாம் நினைவு கூருவோமாக. (ஏசாயா 66;1; 60:13) மேசியாவின் ராஜ்யம் மனுக்குலத்தை உயர்த்துவது மாத்திரமல்ல பூமிக்கு பரிபூரண ஆசீர்வாதத்தையும் கொண்டு வரும். "கடுவெளி களித்து, புஷ்பத்தை போலச் செழிக்கும்."